முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1333

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.05.2023, புதன்கிழமை

1. உயிர்காக்கும் உயர் ஞானவழியில்
உயிர்கொலை நீக்கும் மக்கள் வாழவேண்டி
தயவாக அருளுகின்ற அரங்கனே
தர்மனே கலியுகத்தின் சிறந்த ஞானியே
2. ஞானியே அரங்கனே உந்தனுக்கு
ஞாலமதில் சுப்ரமணியர் யானும் நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 10 ம் நாள், 24.05.2023, புதன்கிழமை)
காலனை வென்று மகாசக்தியை
கலியுகத்தில் வரமாக மக்களுக்கு தருகின்ற
3. தருகின்ற ஆறுமுக அரங்கனே
தவசியே உன் கொள்கையே உலகை ஆளும்
தர்மமாக அரங்கன் நீ தருகின்ற
தன்னலமில்லா அன்னதான சேவையே இந்த உலகை ஆளும்
4. ஆளுகின்ற அற்புதத்தை உன் தொண்டர்களுக்கு
ஆறுமுகன் யான் வரமாக தந்துள்ளேன்
நாளும் நாளும் உன்வழி மக்கள் வந்து
ஞானமதை பயின்று இனிதே ஞானவான்களாக
5. ஆகவே மாற்றமும் ஆற்றலும்
ஐயமில்லா அன்பர்கள் பெற்று உயர
வாழுகின்ற காலமே அரங்கன் உன் அவதாரம் அறிந்து
வடிவேலன் என் காட்சிபெறும் சக்தி கூடி
6. கூடியே உலகோர் குறையில்லா ஞானிகளாக
குவலையத்தையே மாற்றும் மகா சக்திகளாக
ஞாலமதில் தேறுவர் மாறுவர்
ஞானதேசிகன் உன் வழி இந்த மாற்றம் கண்டு மகிழ்வர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–